# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 07.03.2023 supeedsam.com supeedsam@gmail.com





சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com


## சிங்கள மயப்படுத்தல் திட்டத்துக்கு ஒரு அங்குலம் நிலம் கூட வழங்க முடியாது



மட்டக்களப்பு- பொலன்னறுவை எல்லைப் பகுதியான தமிழ் மக்களுக்கு சொந்தமான மயிலந்தனைமடு மாதந்தனை மேச்சல்தரை பகுதியில் சிங்கள மயப்படுத்தலுக்காக திட்டமிடப்பட்ட மதுறு ஓயா வலதுகரை திட்டத்திற்கு தமிழ் பிரதேசத்தின் ஒரு அங்குலம் நிலம் கூட வழங்க முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்னம்பலம் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த திட்டத்துக்கு நிதியுதவி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்கள் இதனை நிறுத்தவேண்டும் அல்லது உங்கள் அலுவலகங்களுக்கு முன்னால் போராட்டம் நடத்தப்படுமென

02 ஆம் பக்கத்தில்...

## அரசியலுக்கு அப்பால் ஒன்றுபடுவோம்

### சிவநேசதுரை சந்திரகாந்தன் அழைப்பு!



அனைவரும் அரசியலுக்கு அப்பால் ஒன்றுபட்டு மட்டக்களப்பு மாவட்டத்திற்கான அபிவிருத்திக்காக உழைப்போம் என மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு- மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்தில் (ஞாயிற்றுக்கிழமை) நீர்பாய்ச்சல் கால்வாய்களை புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டதன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை!



இந்த ஆண்டு தேர்தலை நடத்தவேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பிலும், தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்தும் நாடாளுமன்றமே முடிவெடுக்கும். - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேர்தலுக்காக ஒதுக்கிய நிதியை விடுவிக்கப்படுவதற்கு முட்டுக்கட்டை போட வேண்டாம் என்று உயர்நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை வழங்கியுள்ள நிலையில், ஜனாதிபதியின் இந்தக் கருத்தும் வெளியாகியுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## எதிர்க்கட்சியினர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கூட்டாக கடிதம்!!



எதிர்வரும் மார்ச் 19 அல்லது அதற்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு, எதிர்க்கட்சிள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

எதிர்க்கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்டவர்களின் கையொப்பத்துடன் கடிதமொன்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த கடிதத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர். தேர்தலை

02 ஆம் பக்கத்தில்...

## கதிர்காமத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு போர்க்கொடி!

கதிர்காமம் விகாரையிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசத்திலும் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரை அங்கிருந்து விலக்கிக் கொள்ளுமாறு கதிர்காமம் ஆலய பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர ஜனாதிபதி ரணிலிடம் கோரியுள்ளார்.

பக்தர்களை கையாளும் போது இராணுவத்தினர் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக

02 ஆம் பக்கத்தில்...

## நாட்டில் வாழ வேண்டுமானால் யாராவது பூனைக்கு மணி அடிக்க வேண்டும்



இந்த நாட்டில் வாழ வேண்டுமானால் யாராவது பூனைக்கு மணி அடிக்க வேண்டும். இந்த நாட்டில் நடக்கும் விஷயங்களை நாம் புறநிலையாக பார்க்காமல், அடுத்த தேர்தலை கண்கூடாக பார்க்காமல் இருந்தால், பௌத்த மதகுருமார்கள் இந்த நாட்டை சீரழித்துக்கொண்டே இருப்பார்கள்.

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

கல்வியே துணை

பள்ளித் தலைமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH



Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598

25605: cicero


## எரிபோருள் விலைகள் குறையும்

ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளதால் அடுத்த வாரமளவில் எரிபொருட்களின் விலைகள் குறையலாம் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## பாணின் விலை 100 ரூபா

பாண் உள்ளிட்ட பேக்கரி உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# சந்தா அரசியலை விமர்சனம் செய்யும் ஊடகங்கள் சந்தா இல்லாத சங்கங்களை ஊக்குவிக்கவும் வேண்டும்

## திலகர் வேண்டுகோள்

(பொகவந்தலாவ நிருபர் எஸ்.சதீஸ்)



தொழிற்சங்கத்துக்கு வாங்கும் உறுப்பினர் சந்தாவைக் கொண்டே தமது அரசியல் கட்சிகளையும் நடாத்திச் செல்லும் மரபு மலையகத்திலே வேரூன்றி நிற்கிறது. அதே நேரம் தொழிற்சங்க பலத்தினடிப்படையிலேயே அரசியல் பலமும் தீர்மானிக்கப்பட்டு வருவதுதான் இதுவரையான மலையக அரசியல் வரலாறாகவும் உள்ளது.

இந்த மரபு சார் மலையக அரசியல் இப்போது ஆட்டம் கண்டு வருகிறது. காரணம் தோட்டங்களில் தொழிலாளர்கள் குறைவடைந்து தொழிற்சங்கக் கட்டமைப்பும் வீழ்ச்சி அடைந்து வருகிறது. தொழிற்சங்கம் அல்லாத அரசியல் கட்சிகள் குறித்து அங்கே சிந்திக்கவும் அதே நேரம் தோட்டத் தொழிலாளர்களிடம் சந்தா வாங்காது அவர்களுக்காக குரல் கொடுக்கும் கலாசாரம் உருவாக்கப்படவும் வேண்டும்.

சந்தா அரசியலை விமர்சனம் செய்யும் ஊடகங்கள் சந்தா இல்லாத சங்கங்களை ஊக்குவிக்கவும் வேண்டும் என மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிறுத்தி அக்கரப்பத்தனை வட்டார வேட்பாளர் சுந்தரம் வினோத் சுந்தர், முதன்மை வேட்பாளர் நீலா பன்னீர் செல்வம் ஆகியோரை ஆதரித்து கிளாஸ்கோ தோட்டத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

உலகளாவிய வரலாறு அரசியல் கட்சிகள் முன்னால் நிற்க அதன் பின்னணியில் தொழிற்சங்கங்கள் இயங்குவதாகும்.ஆனால் மலையகத்தில் மாத்திரம் முரணாக தொழிற்சங்கங்களை முன்னால் வைத்து அரசியல் கட்சிகள் அதன் பின்னால் நிற்பது மரபாகி நிற்கிறது.

1947-1952 இந்த 7 பேர் இருக்கத்தக்கதாகவே இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையும் வாக்குரிமையும் சட்டத்தினால் பறிக்கப்பட்டது. இதன்பின்னர் அரசியல் அமைப்பு ஒன்றுக்கான அவசியம் குறைந்து போனது. எனவே தொழிற்சங்க அமைப்பு பலம் பெற்றது. தொழிற்சங்கமாக இருந்த அமைப்புகளே 1977 ஆம் ஆண்டு மீளவும் கிடைக்கப்பெற்ற பிறகு தமது அரசியல் பிரிவுகளை உருவாக்கி தொழிற் சங்கத்தின் பெயரிலேயே கட்சிகளாகவும் பதிவு செய்து கொண்டன. எனவே நான்கு தாசாப்த காலமாக தொழிற்சங்கத்தையே அரசியல் கட்சியாகவும் பார்த்துப் பழகிய மக்கள் தமது தொழிற்சங்க தலைவர்களையே அரசியல் தலைவர்களாகவும் கருதினர், கருதுகின்றனர்.

அந்த கட்சிகளும் தொழிற்சங்கத்துக்கு வாங்கும் உறுப்பினர் சந்தாவைக் கொண்டே தமது அரசியல் கட்சிகளையும் நடாத்திச் செல்லும் மரபு மலையகத்திலே நடாத்தி வருகின்றன. தொழிற்சங்கம் அல்லாத அரசியல் கட்சிகள் குறித்து அங்கே சிந்திக்கவும் முடியாத நிலைமை காணப்பட்டது.அதே நேரம் தொழிற்சங்க பலத்தினடிப்படையிலேயே அரசியல் பலமும் தீர்மானிக்கப்பட்டு வருவதுதான் இதுவரையான மலையக அரசியல் மரபாகவும் இருந்து வருகிறது.

இந்த நிலைமைகளை மாற்றி அமைத்து தோட்டத் தொழிலாளர்களிடம் சந்தா இல்லாத தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய அரசியல் கட்சிகளை உருவாக்கவும் இளைய தலைமுறையினர் உள்வாங்கவும் மலையக அரசியல் அரங்கம் முன்வந்துள்ளது.

சந்தா அரசியலை விமர்சனம் செய்யும் ஊடகங்கள் சந்தா இல்லாத சங்கங்களை ஊக்குவிக்கவும் வேண்டும். மலையக அரசியல் அரங்கம் நாங்கள் மட்டுமே சந்தா வாங்காத சங்கங்களை நடாத்துகிறோம் என கூறவில்லை. அனைத்துத் தொழிற்சங்கங்களையும் அந்த பாதைக்கு அழைக்கிறோம். இந்த விடயத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பொறுப்பை ஊடகங்கள் ஏற்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கோட்டகலை தீ விபத்தில் கடை முற்றாக எரிந்து நாசம்








(தலவாக்கலை பி.கேதீஸ்)

நேற்று முன் தினம் (05) இரவு 10.00 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீயினால் கொட்டகலை நகரில் வூட்டன் கடை வீதியில் அமைந்துள்ள தளபாடக் கடை மற்றும் வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக திம்புள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

தளபாடக் கடையில் ஏற்பட்ட திடீர் தீ பின்னர் மேல் மாடியிலுள்ள கடை உரிமையாளரின் வீட்டிற்கும் பரவியதாகவும் அந்த வீடும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த தீ விபத்தால் கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மின்சாதனங்கள், மரப்பொருட்கள், சைக்கிள்கள், தளபாடங்கள் மற்றும் ஏராளமான பல்வேறு பொருட்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. இந்தக் கடையின் உரிமையாளரின் வீடும் அதே கட்டிடத்தின் மேல் தளத்தில் இருந்ததோடு, வீடு மட்டுமின்றி அனைத்து பொருட்கள் மற்றும் பொருட்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

கடையின் உரிமையாளர் ராமசுந்தரம் கருப்பையா தீ விபத்தினால் தனது கடை மற்றும் வீடு உட்பட மூன்று கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டதாகக் கூறினார். திம்புள பத்தனை, பொலிஸார், கொட்டகலை நகரவாசிகள் மற்றும் பிரதேச வாசிகள் ஆகியோரின் கடின உழைப்பினால் தீ மற்ற பகுதிகளுக்கு பரவாமல் தடுக்கப்பட்டது. கொட்டகலையை அண்மித்த நகரங்களில் தீயணைப்பு வாகனங்கள் இல்லாததால் பாதுகாப்பு படையினர் நுவரெலியா மாநகரசபையின் தீயணைப்பு வாகனங்களை வரவழைத்த போதும் கடையும் வீடும் முற்றாக எரிந்து நாசமாகின. தீ பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் தீயினால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும், பெருமளவிலான சொத்துக்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரிவித்த திம்புள பத்தனை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டின் இன்றைய நிலைக்கு காரணம் நாம் இலங்கையர்களாக சிந்திக்காமல் பிரிவினையுடன் இனரீதியாக சிந்தித்ததே

## சகவாழ்வு நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் ஜெகராஜன் தெரிவிப்பு!

(நூருல் ஹுதா உமர்)



பிரித்தானியர்களிடமிருந்து நாடு சுதந்திரம் அடைந்தபோது இருந்த பொருளாதார நிலையிலிருந்து நாடு இன்றிருக்கும் பொருளாதார நிலைக்கு கொண்டுவரப்பட்டமைக்கு காரணம் நாட்டில் வாழும் மக்களாகிய நாம் இலங்கையர்களாக அன்றி இன ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் சிந்தித்தமையே. எமது நாட்டின் அரசியல் சித்தாந்தங்களினாலும், பிழையான இனவாத, மதவாத பிரச்சாரங்களினாலும் நாடு சமாதானமின்றி சீரழிந்து கொண்டிருக்கிறது என காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் தெரிவித்தார்.

மாளிகைக்காடு கிழக்கு சகவாழ்வு சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ''இனங்களுக்கிடையில் சமூக நல்லிணக்கத்தை உருவாக்குவோம்'' என்ற ஒன்று கூடலும், பரிசளிப்பு நிகழ்வும் மாளிகைக்காடு கமு/கமு/அல்- ஹுசைன் வித்தியாலயத்தில் சகவாழ்வு சங்கத்தின் செயலாளர் ஆர்.எம். தன்ஸீம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர், எமது நாட்டில் அடையாள அட்டை ஏன் அறிமுகம் செய்யப்பட்டது என்ற வரலாற்றை ஆராய்ந்தாலே நாம் நமது நாடு ஏன் இந்த நிலைக்கு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். செய்திகளை அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள் கூட விபத்தில் அல்லது அனர்த்தங்களில் மரணித்ததை மனித உயிர்களாக பார்க்காமல் இன அடையாளம் காட்டுவதையே காணக்கூடியதாக இருக்கிறது.

எமது மூதாதையர்கள் இனங்களுக்கிடையில் வைத்திருந்த ஒற்றுமையை இன்றைய சந்ததிகளும் கட்டியெழுப்ப வேண்டும். மதங்களுக்காக சண்டையிடுபவர்கள் மதங்கள் கூறும் விடயங்களை கேட்டு, வழிப்பட்டு நடப்பதில்லை. சகல மதங்களும் சமூக நல்லிணக்கத்தையும், சகவாழ்வையும் வலியுறுத்துகின்றது என்றார். இந்நிகழ்வில் அல்-மீஸான் பௌண்டஷன் தவிசாளர் யூ.எல். என். ஹுதா உமர், அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி ஏ.எம்.எம். மின்ஹாஜ், காரைதீவு அம்மன் ஆலய குரு ஜீவன் குல சுவாமிகள், வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான பயிற்சியாளர் ஐ.எல். காஸிம் ஆகியோர் சமூக நல்லிணக்கம், சகவாழ்வு, இன ஒற்றுமையின் தேவைப்பாடுகள், பல்லின சகோதரத்துவத்தை வலியுறுத்தி உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் மேலும் காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் ஆர்.எஸ். ஜெகத், மாளிகைக்காடு கமு/கமு/அல்- ஹுசைன் வித்தியாலய பிரதி அதிபர் ஏ.எல்.எம். நளீம், காரைதீவு மனித அபிவிருத்தி ஸ்தாபன உத்தியோகத்தர் எம்.எம்.ஜலீல், காரைதீவு பிரதேச செயலக சகவாழ்வு சங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் தணிகை செல்வி, மாளிகைக்காடு கிழக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிழக்கு இளைஞர் அமைப்பு இளைஞர் கழக தலைவர் ஆர்.எம். தாணீஸ், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி சங்க தலைவர் ஏ.எல். இந்தியாஸ் உட்பட பல்லின பாடசாலைகளின் மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

நல்லிணக்க சித்திர போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் இங்கு வழங்கிவைக்கப்பட்டது.

## பாணின் விலை 100 ரூபா

பேக்கரி பொருட்களின் விலையை குறைத்தால் மட்டுமே தற்போது முடங்கியுள்ள பேக்கரி தொழிலை மீட்டெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பாண் ஒன்றின் விலை 150, 160, 170 எனவும் சில பிரதேசங்களில் 180 ரூபாயிற்கும் விற்பனை செய்யப்படுவதால் விற்பனை 100% குறைந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். மின் கட்டண உயர்வால், பேக்கரி தொழிலில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, பேக்கரி தொழில் நலிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது என ஜயவர்தன தெரிவித்துள்ளார். ஆகவே குறைந்தபட்சம் பாணின் விலை 100 ரூபாயாக குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் ஜயவர்தன கூறியுள்ளார்.

## எரிபொருள் விலைகள் குறையும்

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வேகமாக அதிகரித்தால் பணவீக்கம் வேகமாக வீழ்ச்சியடையும் எனவும் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைகள் குறைவடைந்தால் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடையும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சியினர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு...

நடத்துவதற்கு இருந்த ஓரேயொரு தடையை உயர் நீதிமன்றம் இப்போது நீக்கியுள்ளதால், எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனினும், இது சம்பந்தமாக திறைசேரி செயலாளருடனோ வேறு எவருடனுமோ நீங்கள் கலந்துரையாடத் தேவையில்லை என அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் மார்ச் 20 ஆம் திகதி முன்னதாக, தேர்தலை நடத்கூடிய திகதியை தாமதமின்றி நியமிக்குமாம் தேர்தலை ஆணைக்குழு உறுப்பினர்களை, இன்று (7) காலை 9 மணிக்கு தேர்தல்கள் செயலகத்தின் சந்திக்க விரும்புவதாகவும் எதிர்க்கட்சிகள் அந்தக்கடிதத்தில் கோரியுள்ளன.

## கதிர்காமத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு போர்க்கொடி!

பஸ்நாயக்க நிலமே அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஆலயத்தின் பாதுகாப்பிற்காக கடமையாற்றிய காவல்துறை உத்தியோகத்தர்கள் பக்தர்களுக்கு சிநேகபூர்வமாக சேவையாற்றியதால் மீண்டும் அவர்களது பாதுகாப்பை வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கோவிலில் கடமைகளில் இருந்து இராணுவத்தினரை பாதுகாப்பு தரப்பினர் நீக்கினாலும், அவர்கள் வழங்கிய சேவை மிகவும் முக்கியமானது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## நாட்டில் வாழ வேண்டுமானால் யாராவது பூனைக்கு...

நாட்டை முன்னேற்றவோ, நல்லிணக்கத்தை ஏற்படுத்தவோ அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.வி விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக மகாசங்கம் பற்றிய உங்களது கருத்துக்கள் சிங்களவர்கள் மத்தியில் எதிர்மறையான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. மகா சங்கத்தினரை விமர்சிப்பது புத்திசாலித்தனமா? என வாராந்த இன்று ஊடகவியாளர்களுக்கு கேள்வி பதிலுக்கான பதில் வழங்கையில் இவ்வாறு அறிக்கை மூலமாக பதில் வழங்கினார் மேலும் தெரிவிக்கையில்..

என் வயது முதிர்ந்த வயதிலேயே அதன் விளைவுகளை உணர்ந்து பூனைக்கு மணி கட்டும் பணியை நான் மேற்கொண்டேன். பௌத்த மதகுருமார்கள் அரசின் விவகாரங்களில் தீவிரமாகப் பங்கேற்பதால் ஏற்படும் ஆபத்துகளை அனைத்து சமூகங்களைச் சேர்ந்த மக்களும் சுட்டிக்காட்ட வேண்டிய நேரம் இது.

ஆனால் நிச்சயமாக அறிவுள்ள பௌத்த மதகுருமார்கள் தெற்கு மற்றும் வடக்கு கிழக்கிற்கு இடையில் சமாதான தூதுவர்களாக செயல்பட முடியும். பௌத்த பிக்குகளின் ஆங்கிலம் அல்லது தமிழ் பேசும் தூதுக்குழு ஒன்று முதலில் வடக்கில் உள்ள எமது புத்திஜீவிகளை சந்தித்து தமிழர்களின் பிரச்சனைகள் என்ன என்பதை அறிந்து கொள்ளுமாறு நான் பரிந்துரைக்கிறேன்.

அதன்பிறகு, வரலாறு மற்றும் தொல்லியல் துறையின் சமீபத்திய முன்னேற்றங்கள் பற்றிய குறிப்புகளைப் பகிர்ந்து கொள்ள, எங்கள் வரலாற்றுப் பேராசிரியர்களுக்கு இடையே தொடர்பு கொள்ளலாம். அதே சமயம் அடிமட்ட மட்டத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும் வகையில் இரு சமூகத்தினருக்கும் இடையிலான சந்திப்புகளை சிங்கள தமிழ் நட்புறவுச் சங்கங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மனித உரிமைகள் ஆணையாளர்களை வடக்கிற்கு அனுப்புவது மக்களின் தேவைகள் மற்றும் உணர்வுகள் பற்றிய சரியான கண்ணோட்டத்தையோ அல்லது போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான எந்தவொரு விசாரணையும் சர்வதேச உள்ளீட்டுடன் இருக்க வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையை வழங்காது என்றார்.

## அரசியலுக்கு அப்பால் ஒன்றுபடுவோம்

தொழில்நுட்ப மாற்றத்தை நோக்கி விவசாய அமைப்புகள் மற்றும் பொது அமைப்புக்கள், மக்களை ஊக்கப்படுத்த வேண்டும் என அவர் இதன்போது வலியுறுத்தினார்.

மேலும், 2023-24ஆம் ஆண்டுகளில் பயிர்களுக்கான நீர் பாசன திட்டங்களையும் கிராமிய வீதிகளையும் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறைந்தது உளவியந்திரத்தைக் கொண்டு செல்லுகின்ற முக்கியமான பாதைகளையாவது செய்துதர நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

தனது அமைச்சில் 10 மில்லியனுக்கு மேலான பணம் இருப்பதாகவும் இந்த பணிகளுக்காக மூன்று மில்லியன் தொகையையாவது ஒதுக்குவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

23 வருடத்திற்கு முன்பாக திட்டமிடப்பட்ட, உன்னிச்சை நீர்பாசன திட்டத்தின் கீழ் உள்ள நாவற்காடு-பாலக்காடு நீர்ப்பாய்ச்சல் கால்வாயை புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிட்டத்தக்கது.

மாவட்ட நீர்பாசனதிணைக்களத்தின் பணிப்பாளர் நாகராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீர்பாசனத்துறை இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஸ பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா உட்பட திணைக்களங்களின் தலைவர்கள், கமக்கார அமைப்புகளின் அதிகாரசபை உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## சிங்கள மயப்படுத்தல் திட்டத்துக்கு

அவர் எச்சரிக்கை விடுத்தார். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் கட்சி ஆதரவாளர்களுடன் மயிலந்தனை மாதந்தனை மேச்சல் தரை பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை)விஜயம் மேற்கொண்டு பண்ணையாளர்களை சந்தித்து அவர்களுடைய பிரச்சனைகளை கேட்டறிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

கிழக்கு மாகாண ஆளுநர், வனவளதிணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை போன்ற அனைத்து கட்டமைப்புக்களும் இங்குள்ள மேச்சல்தரை காணிகளை அபகரிப்பதற்கான நடவடிக்கையில் உறுதியாக இருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கிழக்கு மாகாண ஆளுநருடைய முழு ஒத்துழைப்புடன் கண்ணுக்கு முன்னால் அவரது வழிகாட்டலில் இது நடப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம்...

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் பிரதிநிதிகள் உள்ள அதியுயர் சபையே நாடாளுமன்றம். எனவே, நாடாளுமன்றத்தின் தீர்மானங்களை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது எனவும், நாடாளுமன்றத்துக்குச் சவால் விடுத்து எவரும் செயற்பட முடியாது எனவும் மீளவும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தேர்தல்கள் ஆணைக்குழு முதலில் ஒருமித்த கருத்துக்கு வர வேண்டும். அதில் உள்ளவர்கள் இருவேறு திசைகளில் பயணிக்கின்றனர். அவர்களுக்கிடையில் ஒருமித்த நிலைப்பாடு இல்லை.

இந்த வருடம் தேர்தல் நடத்த வேண்டிய கட்டாயம் இல்லை. நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்தில்கொண்டு தேர்தலை எப்போது நடத்துவது என்று நாடாளுமன்றம் முடிவெடுக்கும் - என்றார்.

# ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம்







(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை ஸ்ரீ தரவை சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம்05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முத்துச்சப்பர வீதி ஊர்வலம் யானைகள் சகிதம் கல்முனை நகர் ஊடாக வலம் வந்தன. இதில் தமிழ் மக்களின் கலை, பண்பாட்டு அம்சங்களை பிரதிபலிக்கும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் கே.கோபாலரட்ணம், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜெ.அதிசயராஜ், தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கே.குணராசா உட்பட ஆலயத்தின் பரிபாலனசபையினர், பக்த அடியார்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

# வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கௌரவிப்பு




(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் வலயக் கல்விப் பணிப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (4) கேணிநகர் மதீனா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அதிபர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.செயினுலாப்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா, மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் புதிதாக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் ஆகியோர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஜாபிர்கரீம், ஆசிரிய ஆலோசகர்களான எம்.பி.எம்.சித்தீக், எச்.எம்.ஆதம் லெப்பை மற்றும் ஓட்டமாவடி கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருதில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாம்




(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அமைப்பின் ஏற்பாட்டில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாம் சாய்ந்தமருது சுகாதார மத்திய நிலையத்தில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் நெறிப்படுத்தலில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் எம்.ஐ.சம்சுடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டாக்டர் ஏ.டவுள்யூ.வாஜித், கல்முனை பிராந்திய ஆயுர்வேத வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் ஏ. எம். நபீல், சாய்ந்தமருது ஆயுர்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் எஸ்.எம்.ரிஷாட், தலைமை பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ மஜீத், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சமூன், சமூக அபிவிருத்தி உதவியாளர் யு.எல். ஜஃபர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ் வைத்திய முகாமில் 06 பேர் கொண்ட ஆயுர்வேத வைத்திய குழாம் மூலம் பொது மக்களுக்கு வைத்திய ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன் தொற்ற நோய்கள் தொடர்பாக நோயாளிகளுக்கு விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டு மாத மாதம் கிளினிக் வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது.

# கண்ணகி கிராமத்தில் யானை அட்டகாசம்!

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை




(ம.கிரிசாந்)

அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கண்ணகி கிராமத்தில் காட்டு யானைகள் இரவு நேரங்களில் மக்கள் குடியிருப்புகள், விவசாய நிலங்களுக்குள் வருகைதந்து தொடந்து அட்டகாசம்.

கண்ணகி கிராம பகுதியில் சுமார் 650 குடும்பங்கள் வசித்துவருவதுடன் குறித்த பகுதியில் அண்மைக்காலமாக இப்பகுதிகளில் காட்டுயானைகள் அட்டகாசம் அதிகரித்து வருவதுடன் உட்புகுந்து தொடர்ந்தும் மக்களை அச்சுறுத்தி வருகின்றன.

கடந்த வருடம் நவம்பர் மாதம் குறித்த காட்டுயானை தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு பெண் பிள்ளைகளின் தாயான குடும்பபெண் ஒருவர் உயிரிழந்து கிராம மக்களை சோகத்திற்கு உள்ளாக்கியமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இருக்கின்ற நிலையில் குறித்த காட்டுயானைகள் மக்கள் குடியிருப்புக்கள், பயிர் நிலங்கள் என பலவற்றை தொடர்ந்தும் சேதப்படுத்தி வருகின்றது. மேலும் இவ்வாறு இரவு நேரத்தில் திடீரென வீட்டிற்குள் நுழைகின்ற காட்டுயானையினால் பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அத்துடன் ஊருக்குள் நுழைந்து தொடர் அட்டகாசம் செய்து வருவதினால் இரவு வேளையில் மக்கள் நித்திரையின்றி பயத்துடன் விழித்திருக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. இதனால் சிறுவர்கள், கற்பினி தாய்மார், முதியோர் என பலர் பயத்தில் பல்வேறு உடல் உள உபாதைகளுக்குள்ளாகியும் வருகின்றனர்.

இவ்வாறான பல பாதிப்பான விடயங்கள் இடம்பெற்று வருகின்றதுடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல முறை தெரிவித்தும் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியாக சிரேஷ்ட சட்டத்தரணி அன்ஸார் மௌலானா நியமனம்



(பாறுக் ஷிஹான்)

கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியாக சிரேஷ்ட சட்டத்தரணியும்,அகில இலங்கை சமாதான நீதிபதியும், உத்தியோகப்பற்றற்ற நீதவானுமான மருதமுனையைச் சேர்ந்த பளீல் மௌலானா அமீருல் அன்சார் மௌலானா கடந்த 01.03.2023 ஆம் திகதியில் இருந்து செயற்படும் வண்ணம் இலங்கை நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மருதமுனையிலும் கிழக்கிலங்கையிலும் புகழ்பெற்ற நன்மதிப்புக்குரிய அன்சார் மௌலானா அவர்கள் பேராதனை பல்கலைக்கழக பொதுப் பட்டதாரியும் இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமானியும் ஆவார். இவர் இலங்கை அதிபர் சேவை முதலாம் தரத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்றவரும் ஆவார். இவர் வழக்கறிஞர் உயர் தொழிலில் 25 வருட நிறைவான ஆளுமையையும் மக்கள் நன்மதிப்பையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.



# அருந்ததி
இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி
இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25579 | கு | 1975**
பருத்தித்துறை |இந்து
Teacher|இலங்கை|செவ்: 2
உத்திரட்டாதி (மீனம்)
173 செ.மீ | சைவம்

**25481 | வே | 1976**
சுதுமலை |இந்து
Consultant Respiratory
Physician |UK
ரேவதி (மீனம்) | 168 செ.மீ

**25506 | வே | 1978**
புலோலி | இந்து
Staf | Finland
ரேவதி (மீனம்)
168 செ.மீ

**25516 | வே | 1979**
மட்டக்களப்பு | இந்து
Doctor | இலங்கை
திருவோணம் (மகரம்)
170 செ.மீ

**25483 | வே | 1979**
கரம்பொன் |இந்து
Engineer | US
பூசம் (கடகம்)
179 செ.மீ

**25559 | வே | 1981**
பருத்தித்துறை | இந்து
Chef | Malta
பூரம் (சிம்மம்)
181 செ.மீ

**25536 | கு | 1983**
முல்லைதீவு |இந்து
Driver | கட்டார்
திருவோணம் (மகரம்)
173 செ.மீ | சூ.செவ்: 12

**25494 |வே |1985**
மானிப்பாய் | இந்து
Store Manager |இலங்கை
கேட்டை (விருச்சிகம்)
164 செ.மீ

**25502 | வே | 1985**
தாவடி | இந்து
Sales Rep | இலங்கை
ரோகிணி (இடபம்)
168 செ.மீ

**25498 | வே | 1985**
சுண்டிக்குளி | கிறிஸ்தவம்
Own Business |இலங்கை
ரோகிணி (இடபம்)
179 செ.மீ

**25518 | வே | 1986**
மானிப்பாய் |இந்து
Chef | பிரான்ஸ்
ஆயில்யம் (கடகம்)
.. செ.மீ

**25545 | கு | 1987**
அம்பாறை | இந்து
Senior QS | இலங்கை
மகம் (சிம்மம்)
162 செ.மீ | செவ்: 4

**25519 | வே | 1987**
காரைநகர் | இந்து
Drafting Manager| Australia
ரோகிணி (இடபம்)
175 செ.மீ | சூ.செவ்: 9

**25504 | வே | 1987**
தாவடி | இந்து
Sales Manager | இலங்கை
உத்திராடம் (மகரம்)
182 செ.மீ | சூ.செவ்: 12

**25503 | வே | 1987**
காரைநகர் |இந்து
Accountant | இலங்கை
அஸ்வினி (மேடம்)
183 செ.மீ | செவ்: 8

**25578 | வே | 1987**
வவுனியா |இந்து
Stastion Master | இலங்கை
அத்தம் (கன்னி)
160 செ.மீ | செவ்: 2

**25582 | வே| 1988**
திருகோணமலை |இந்து
Admin
இலங்கை
181 செ.மீ

**25497 | வே | 1988**
அல்லைப்பிட்டி |இந்து
Floor Manager | Australia
திருவாதிரை (மிதுனம்)
168 செ.மீ | செவ்: 1

**25547 | வே | 1989**
கிளிநொச்சி| இந்து
Staff | Australia
மூலம் (தனுசு)
173 செ.மீ | சூ.செவ்: 10

**25532 | வே | 1989**
கல்லடி | இந்து
Network Engineer | UK
உத்தரம் (சிம்மம்)
175 செ.மீ | சூ.செவ்: 12

**25529 | கு | 1989**
மன்னார் | கிறிஸ்தவம்
Management Serivce
Officer | இலங்கை
170 செ.மீ

**25555 | வே | 1990**
அல்வாய் |இந்து
Public Mgmt Assistant
ரோகிணி (இடபம்) |இலங்கை
176 செ.மீ

**25512 | வே | 1990**
கரவெட்டி | இந்து
Senior Executive |இலங்கை
அவிட்டம் (மகரம்)
176 செ.மீ

**25543 | வே | 1991**
நல்லூர் | இந்து | சைவம்
Director| இலங்கை
பூராடம் (தனுசு)
155 செ.மீ | சூ.செவ்: 12

**25491 | வி | 1991**
அம்பாறை |இந்து
Pawning Office Incharge
பூராடம் (தனுசு) | இலங்கை
176 செ.மீ

**25530 | வே | 1991**
பருத்தித்துறை |இந்து
Mortgage Manager
அஸ்வினி (மேடம்) | கனடா
167 செ.மீ

**25537 | வே | 1991**
பருத்தித்துறை |இந்து
Doctor | இலங்கை
புனர்பூசம் (மிதுனம்)
176 செ.மீ | செவ்: 4

**25542 | வே | 1991**
புத்தூர் | இந்து
Staff | UK
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | சூ.செவ்: 5

**25488 | வே | 1992**
அளவெட்டி| இந்து
QS | கட்டார்
கேட்டை (விருச்சிகம்)
183 செ.மீ

**25568 | சா | 1992**
மிருசுவில் |இந்து
Civil Engineer | சிங்கப்பூர்
ஆயில்யம் (கடகம்)
174 செ.மீ | செவ்: 2

**25489 | வே | 1993**
கோப்பாய் |இந்து
Lecturer | இலங்கை
சித்திரை (கன்னி)
183 செ.மீ | செவ்: 2

**25511 | வி | 1993**
கொக்குவில் |இந்து
Software Engineer
சதயம் (கும்பம்) | சிங்கப்பூர்
169 செ.மீ

**25554 | வே | 1994**
யாழ் நகர் | இந்து
Engineer | Australia
மிருகசீரிடம் (மிதுனம்)
183 செ.மீ

**25586 | கோ | 1994**
சண்டிலிப்பாய்| இந்து
Hotel | கனடா
ரோகிணி (இடபம்)
176 செ.மீ

**25528 | வே | 1995**
பருத்தித்துறை |இந்து
IT | இலங்கை
மகம் (சிம்மம்)
173 செ.மீ | செவ்: 12

**25563 | வே | 1995**
பருத்தித்துறை |இந்து
Teacher | இலங்கை
மகம் (சிம்மம்)
161 செ.மீ | செவ்: 1

**25567 | வே | 1995**
காரைநகர் | இந்து
Ass. Quality Manager
அஸ்வினி (மேடம்)
175 செ.மீ |இலங்கை

**25490 | வே | 1995**
காரைநகர் | இந்து
Production Manager | Italy
பூரட்டாதி (கும்பம்)
192 செ.மீ | செவ்: 2

**25605 |வே+ந| 1997**
கொடிகாமம் | இந்து
Staff | கட்டார்
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ

**25593 | கு | 1999**
குரும்பசிட்டி | Non RC
Trainning | இலங்கை
திருவோணம் (மகரம்)
155 செ.மீ

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# பிஞ்சு மனங்களில் நஞ்சை விதைக்காதீர்கள்!

## மாவடிப்பள்ளியில் தவிசாளர் ஜெயசிறில்

**( காரைதீவு சகா)**

குழந்தைகளின் நிகழ்வுகளில் அரசியல் அல்லது இனவாதம் பேசாதீர்கள். பிஞ்சு மனங்களில் நஞ்சை விதைக்காதீர்கள்.

இவ்வாறு மாவடிப்பள்ளியில் இடம் பெற்ற முன்பள்ளி நிகழ்வொன்றில் பிரதம உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் வேண்டுகோள் விடுத்தார்.

மாவடிப்பள்ளி அனைத்து பாலர் பாடசாலைகள் சம்மேளன மாணவர்களின் வருடாந்த கலை நிகழ்ச்சியும், பரிசளிப்பும் சம்மேளன தலைவர் எம்.எச்.எம். அஸ்வர் தலைமையில் மாவடிப்பள்ளி அல்-அஸ்ரப் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவடிப்பள்ளி அல்-மதீனா பாலர் பாடசாலை, றோயல் பாலர் பாடசாலை, அல் ரஹ்மானியா பாலர் பாடசாலை, அந் நூர் பாலர் பாடசாலை ஆகியவற்றின் ஒன்றிணைவான இந்த சம்மேளன வருடாந்த கலை நிகழ்ச்சி மற்றும் பரிசளிப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் மேலும் உரையாற்றுகையில்..

காரைதீவு பிரதேச சபை காலத்தில் நாங்கள் கூடிய அபிவிருத்தியை செய்தது மாவடிப்பள்ளியில் தான். இனமத பேதமில்லாமல் நான் சேவையாற்றியுள்ளேன். என் மீது பலரும் விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். இந்த மேடை



யிலும் இனவாத கண்ணோட்டத்துடன் மின் விளக்கு தொடர்பாக கோரப்பட்டது. அரசியல் இனவாதம் பேசுவதற்கு இது உரிய இடமல்ல. எனவே வேறு பொது இடத்தில் அழைத்தால் விமர்சனங்களுடன் நான் நேரடியாக விவாதிக்க தயாராக உள்ளேன்.

கொரோனா காலத்தில் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது முஸ்லிம்களுடன் சேர்ந்து நான் போராடிய போது தாம் எதுவும் செய்யாமல் முடங்கி கிடந்து மொட்டுக்கு ஆதரவு திரட்டியவர்கள் இப்போது தான் வெளியே வந்து தங்களை நல்லவர்களாக காட்டிக்கொள்ள, என்னை இனவாதியாக சித்தரிக்கிறார்கள். நான் கொரோனா காலத்தில் நிறைய உதவிகளை முஸ்லிம்களுக்கும் செய்துள்ளேன். நீர் இணைப்புக்களை, மின்சார இணைப்புக்களை கூட எனது சொந்த நிதியில் வழங்கியுள்ளேன்.அதனை விளம்பர படுத்தவில்லை. நான் மக்களுக்காக மக்களுடன் பயணிக்கிறேன். விமர்சனங்களை யிட்டு நான் அலட்டிக்கொள்வதில்லை.

காரைதீவு மாவடிப்பள்ளி பிரதான வீதி தெரு விளக்குகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொருத்தியபோது எங்களிடம் தெரிவிக்கப்படவில்லை.

பொருத்திய பின்னர் அதற்கான மாதாந்த மின்கட்டணத்தை செலுத்துமாறு எம்மிடம் கேட்டனர்.

எம்மிடம் கேளாமல் எந்த அனுமதியையும் பெறாமல் செய்த வேலைக்கு நாம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும் சபையில் உறுப்பினர் றனீஸ் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அதனைப் பொறுப்பேற்றோம்.

அதனை நாங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கேட்டபோது அவர்கள் அது தமக்குச் சொந்தமான வேலையென்றும் அதை நாங்கள் தடுக்கப்போகின்றோம் என்ற தோரணையிலும் கருத்து வெளியிட்டனர்.

உண்மையில் இந்த வீதி காரைதீவுக்கோ மாவடிப்பள்ளிக்கோ மட்டும் உரித்தானதல்ல. நாட்டின் சகல பாகங்களிலும் இருந்து வரும் சகல பயணிகளுக்குமானது. எனவே மக்கள் மற்றும் பயணிகள் நன்மை கருதி உடன்பட்டோம். பெரும்பாலும் செவ்வாய்கிழமை இம் மின் குமிழ்கள் ஒளிரும்.என்றார்.

பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல சிறப்பு கௌரவ அதிதிகள் கலந்து கொண்டனர்.

# களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு தங்க விருது





**(ரக்ஸனா)**

அண்மையில் நாடளாவிய ரீதியில் இலங்கை தரமுகாமைத்துவ நிறுவனத்தால் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 69 நிறுவனங்களிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் 400 இற்கும் மேற்பட்ட குழுக்களுக்கிடையே போட்டி நடாத்தப்பட்டு வழங்கப்பட்ட விருது வழங்கும் விழாவில் மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் மற்றும் தரமுகாமைத்துவ பிரிவு வைத்தியரும், களுதாவளை ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான குகதாசன் மயூரேஷன் தலைமையிலான குழுவில் தாதிய பரிபாலகி திருமதி சுகிர்தராணி ஜெயரட்ணம், தொற்று நோய் கட்டுப்பாட்டு பிரிவின் பொறுப்பு தாதி உத்தியோகஸ்த்தர் திருமதி சுதர்ஜினி ஜீவன், மற்றும் தரமுகாமைத்துவ பரிவு பொறுப்பு தாதி உத்தியோகஸ்த்தர் திருமதி தனுஸ்சா பிரசாந், மற்றும் சிற்றூழியர் மேற்பார்வையாளர் ஜெயசீலன் கிரிதரன் ஆகியோர் மேற்படி வைத்தியசாலை சார்பாகக் கலந்து கொண்டு தங்க விருதைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அதிகாரி குணசிங்கம் சுகுணன் அவர்களின் ஆலோசனையும், வழிகாட்டுதலின் பெயரில், களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய அத்தியட்சகர் க.புவனேந்திரநாதன் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ், திட்டமிடல் மற்றும் தரமுகாமைத்துவ பிரிவு வைத்திய அதிகாரி குகதாசன் மயூரேஷன் விளக்கக்காட்சிப்படுத்தினார். தொற்று நோய் கட்டுப்பாட்டு பிரிவின் பொறுப்பு தாதி உத்தியோகஸ்த்தர் திருமதி சுதர்ஜினி ஜீவன் அவர்கள் அயராத முயன்று செய்த கழிவு முகாமைத்துவ ஆய்வினை கொண்டு இவ்விருதுக்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.

இவ்விருதுக்காக அரச மற்றும் தனியார் அமைப்புக்களிலிருந்து விண்ணப்பித்த நூற்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களுள் சுகாதாரத் துறைசார்ந்து விண்ணப்பித்தவர்களுள் களுவாஞ்சிகுடி ஆதர வைத்தயிசாலைக்கு மாத்திரமே இந்த தங்க விருது கிடைக்கப் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும். இவ்விருது கிடைக்கதற்கு சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அதிகாரி கு.சுகுணன் களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய அத்தியட்சகர் க.புவனேந்திரநாதன், உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதாக தரமுகாமைத்துவ பிரிவு வைத்திய அதிகாரி கு.மயூரேஷன் இதன்போது தெரிவித்தார்.

# கல்முனை மாநகர சபை ஊழல் விசாரணையை நீதியாக முன்னெடுக்க வேண்டும்

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை மாநகர சபை ஊழல் விசாரணையை நீதியாக முன்னெடுக்க கல்முனை முதல்வர் பிரதி முதல்வர் பதவி விலக வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

கல்முனை மாநகர சபை ஊழல் தொடர்பில் அக்கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி கட்சி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை(5) இரவு நடாத்திய செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது ;

மஹிந்த கோட்டா ஆட்சியில் ஊழல் நடந்த போது மஹிந்த, கோட்டா பொறுப்பல்ல, நிர்வாக உத்தியோகத்தர்கள்தான் பொறுப்பு என யாரும் சொல்லவில்லை. மாறாக அவரின் கட்சி, அவரின் கட்சிக்கு பாராளுமன்றில் ஆதரவு கொடுத்த கட்சிகள் என அனைவரையும் நம் சமூகமும் சேர்ந்து குற்றம் சுமத்தியது.

மஹிந்த கோட்டா ஆட்சியில் நடந்த கொள்ளைக்கு மஹிந்த கட்சியும் அவரது கட்சிக்கு பாராளுமன்றில் ஆதரித்த அனைத்து கட்சிகளுக்



கும் கொள்ளையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்குண்டு.

அதே போல் கல்முனை மாநகரசபை கொள்ளையில் ஹக்கீமுக்கும் அவரது கட்சிக்கும் அக்கட்சியின் ஆட்சிக்கு ஒத்துழைத்த கட்சிகள், சுயேற்சைளுக்கும் பங்குண்டு என்பதே உண்மை.கல்முனை மாநகரசபை நிதி மோசடி சம்மந்தமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மௌனமாக இருப்பதில் சந்தேகம்.

அதே போல் இப்பிரச்டினையை சிவில் அமைப்புக்களால் மட்டும் தீர்க்க முடியாது. சிவில் அமைப்புக்கள் சாதித்தது எதுவும் இல்லை. கடைசியில் பண பலம் உள்ள கட்சிகளுக்கு அவர்கள் விலை போவார்கள்.

கல்முனை ஊழலை அரசியல் மயப்படுத்தினால் மட்டுமே முஸ்லிம் காங்கிரஸினர் பயப்படுவார்கள். அல்லாமல் சிவில் மயப்படுத்தினால் போதும் என்றிருந்தால் இப்பிரச்சினையை கல்முனையை ஆள்வோர் கணக்கே எடுக்க மாட்டார்கள். காரணம்,

சிவில் இயக்கம் என்றால் தேர்தல் வந்ததும் பண பலம் படைத்த கட்சிகளுக்கு விலை போவார்கள், அல்லது ஊழல் கட்சிகளுக்கெதிராக தேர்தலில் நடு நிலை என ஏமாற்றிக் கொண்டு பேசாமல் மௌனமாக இருப்பர் என்பது முஸ்லிம் காங்கிரஸினருக்கும் ஏனைய ஏமாற்று கட்சிகளுக்கும் நன்கு தெரியும்.

ஆகவே கல்முனை மக்கள் இந்த ஊழலுக்கெதிராக ஜனநாயக ரீதியில் கல்முனையில் ஆர்ப்பாட்டம் செய்து இப்பிரச்சினையை தேசிய மயப்படுத்துமாறு ஐக்கிய காங்கிரஸ் கட்சி அழைப்பு விடுக்கிறது என்றார்.

# சிவானந்தா கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏழாவது மகிழ்ச்சிகர மாணவர் பயணத் திட்டம்



**(ரக்ஸனா)**

சிவானந்தாகல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏழாவது மகிழ்ச்சிகர மாணவர் பயணத் திட்டம் கோவில்குளம் விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்றது. சிவானந்தாகல்வி மேம்பாட்டுப் பேரவையால் வறுமைக்கோட்டிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட மகிழ்ச்சிகர மாணவர் பயணம்ʼʼ எனும் திட்டத்தின் ஏழாவது பாடசாலைத் திட்டம் மட்.கோவில்குளம் விநாயகர் வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் பி.திவாகரன் தலைமையில் சனிக்கிழமை(04.02.2023) இடம் பெற்றது.

பாடசாலை மாணவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு உதவும் முகமாக மகிழ்ச்சிகர மாணவர் பயணம் எனும் தொனிப்பொருளில் 2001 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் படித்த மாணவர்களின் மாதாந்தச் செயற்பாடாக ஆரம்பிக்கப்பட்ட மேற்படி திட்டமானது 2000ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் கற்ற மாணவர்களும் இணைந்த சிவானந்த கல்வி மேம்பாட்டுப் பேரவை எனும் அமைப்பின் பெயரில் பரிணமித்துச் செயற்பட்டு வருகிறது.

ஆதனடிப்படையில் இம்மாதத்திற்கான திட்டத்தில் மட்.கோவில்குளம் விநாயகர் வித்தியாலயம் தெரிவுசெய்யப்பட்டு வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட சுமார் 26 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டன.

2001 ஆம் சிவானந்தா தேசிய பாடசாலையில் க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயின்ற இலங்கை வாழ் நண்பர்கள் மற்றும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பிறேமானந்தன் ஆகியோரின் நிதி அனுசரணையில. இது இடம்பெற்றது.

மகிழ்ச்சிகர மாணவர் பயணத் திட்டத்தினை பேரவையின் உறுப்பினரான கு.புவதாஸின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேரவை உறுப்பினர்களான கலாநிதி து.பிரதீபன், கலாநிதி த.விவானந்தராசா ஆகியோர் மகிழ்ச்சிகர மாணவர் பயணத் திட்டத்தின் நோக்கம் மற்றும் சமகாலத்தில் மாணவர்கள் மத்தியில் நிலவுகின்ற பிரச்சினைகள், அவற்றை முகம்கொடுக்கும் நுட்பங்கள், பெற்றோர்களுக்கிருக்கின்ற சவால்கள், அவற்றை இல்லாதொழிப்பதற்கான உபாயம் என்பவற்றை நடைமுறை உதாரணங்களைக் கொண்டு இதன்போது மாணவர்களுக்குத் தெழிவுபடுத்தினார்கள்.

பேரவை உறுப்பினர் அ சித்தாத்தன், கல்வியினை ஆதாரமாகக் கொண்டு மாணவர்கள் எவ்வாறு வாழ்வை வளப்படுத்தலாம் என்பதையும் வறுமையை எவ்வாறு கல்வியால் முறியடிக்கலாம் என்பதையும் பல ஆதாரங்களுடன் மாணவர்களுக்கு விளக்கினார்.

மகிழ்ச்சிகர மாணவர் பயணத்தில் சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றின் முக்கியத்துவம் மற்றும் ஏற்றத்தாழ்வில்லா மாணவர் மகிழ்ச்சிச் சூழலை உருவாக்குதல் பற்றி பல ஆக்கபூர்வமான கருத்தியல்களைத் தாங்கிய உரையினை பேரவை உறுப்பினரான கி.பத்மநாதன் பயிற்சிகளுடன் விளக்கியிருந்தார்.

ஆங்கில ஆசிரியரும் பேரவையின் உறுப்பினருமான த.விமல் தொலைபேசி பாவனை மாணவர்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதை மாணவர்களுக்கு விளக்கியதோடு பல கல்வி மேம்பாட்டுக் கருத்துக்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

இதன்போது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பேரவை அங்கத்தவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டு மாணவர்களுக்கான பாதணிகளை வழங்கி வைத்தனர்.

# தோட்ட ஆலயங்களுக்கு கூடாரங்கள், கதிரைகள்



**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர் வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கு அமைவாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருதப்பாண்டி ராமேஸ்வரனால் தலவாக்கலை ட்றூப், கிளனமோறா,ஹொலிரூட், கிறேட் வெஸ்டன் லூசா, ஸ்கல்பா ஆகிய தோட்ட ஆலயங்களுக்கு கூடாரங்கள், கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன.



இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல், உப தலைவர் சச்சிதானந்தன், தலவாக்கலை பிரதேச அமைப்பாளர் கிஷோகுமார் உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சொல்லத் துடிக்குது மனசு: 04

# உணவே நோயானால்.....



**நாவினுக்கு அடிமையாகிப் பேருணவு உண்பதனால் வந்திடுமே உபாதை - அது தந்திடுமே தொற்றா நோய்களை.**

உனது இன்றைய நிலைக்கு நீயே காரணம் நாம் இப்போது சுகதேகியாக, ஆரோக்கியத்துடன் இருக்கிறோம் என்றால் அதுக்கு நாமே காரணம். நோயாளியாகப் பிணி, துன்ப, துன்ப துயருடன் வாழ்கிறோம் என்றால் அதற்கும் நாமீடு காரணம். கண்டதெல்லாம் உண்ணாது ஆரோக்கியமான நிறை உணவை உண்டிருந்தால் , உடூற்பயிற்சி செய்திருந்தால், எட்டு மணித்தியாலம் உறங்கி இருந்தால், போதியளவு நீர் பருகி இருந்தால் நாம் ஏன் நோயாளியாக ஆகியிருக்க வேண்டும். எனது வாழ்க்கை என் கையில் உள்ளது. எனது வாழ்க்கையை நானே வாழ வேண்டும். இன்னொருவருக்காகவோ, அவரைப் போலவோ, அவர் கூறுகிறார் என்பதற்காகவோ நாம் வாழ முற்படும் போது தான் வாழ்க்கையில் பிரச்சினைகள், துன்பங்கள், நோய், நொடிகள் யாவும் நம்மை வந்து சேருகின்றன.

திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு, மருங்கை, 21வது வயது பிறந்தநாள் (Key Birth Day-), மரண வீட்டு விருந்துபசாரங்கள் என ஒவ்வொரு நிகழ்வுகளிலும் புறியாணி உணவுகள்தான் வழங்கப்படுகின்றன. போதாக் குறைக்குச் சில கோயில்களில் வழங்கப்படும் அன்னதானங்களிலும் புறியாணி உணவினை வழங்கப் பழகிவிட்டார்கள். பல மரண வீடுகளில் வழங்கப்படும் உணவுகளும் திருமண வீடுபோல் ஆக்கிவிட்டனர். இத்தகைய உணவுகளால் பலர் உடல் பருமனாகி தொற்றா நேயாளிகளாகி விடுகின்றனர். பெண் பிள்ளைகள் சிறுவயதில் புப்படைதல், மாதவிடாய் வட்டம் குழம்புதல், பிள்ளைப் பேறின்மை, கருக் கலைதல், நீரிழிவு,



உயர் குருதி அழுத்தம், புற்று நோய் ஆகியவற்றுக்குக் காரணமாகி விடுகின்றன.

வீடுகளிலும் ஏனைய இடங்களில் நடைபெறும் விருந்துபசாரங்களில் வழங்கப்படும் புறியாணிச் சாப்பாடுகளில் புரொயிலர் கோழி, பாம் எண்ணெய், மாஜரின், மசாலாப் பொருட்கள், சிற்றிக் அசிட், அஜினோ மோட்டோ, வெனிலா, கலரின், சிக்கின் கியுப், தக்காளி சோர்ஸ், உப்புத் தூள், வினாகிரி ஆகியன மனித உடலில் பல பக்க விளைவுகளை ஏற்படுத்துவனவாகும். 45 நாட்களுக்குள் கோழியின் நிறையினை இரண்டு, இரண்டரைக் கிலோவாக்குவதற்காக வழங்கப்படும் குழிசை, கோழித் தீனி ஆகியவற்றில் செயற்கையாக ஓமோன் சுரப்பினைத் தூண்டி, உணவுப் பசியினை அதிகரிப்பதற்காக சேர்க்கப்பட்டிருக்கும் இரசாயனப் பதார்த்தங்கள் அக்கோழி இறைச்சி மற்றும் முட்டையினை உண்பவர்களுக்கும் சென்றடைகின்றன. அதனால் கெட்ட கொழுப்பாகிய சதுரேட்டட் கொழுப்பு அதிகரித்து உடல் பருமனை அதிகரிக்கின்றன. அதேபோல் புறியாணி உணவில் சேர்க்கப்படும் எண்ணெய், மாஜரின், நெய் ஆகியவற்றில் உள்ள ட்ரானஸ் கொழுப்பும் உடல் பருமனை அதிகரிக்கக் காரணமாகின்றன. இதனால் கொலஸ்ரோல், மாரடைப்பு, இதய நோய் ஆகியன உருவாகின்றன.

சகல எண்ணெயிலும் கொழுப்பு உண்டு. எண்ணெய் கொதிக்கும் கால அளவில் கொழுப்பின் அளவு தங்கியுள்ளது. எண்ணெய் கொதிக்கக் கொதிக்க கொழுப்பு HDL இல் இருந்து LDL க்கு மாறிக் கொண்டு போகும். LDL க்கு மாறுவதுதான ஆபத்தானது. அதனால் எண்ணெயை ஒரு தடவைக்கு மேல் பயன்படுத்தக் கூடாது என ஆய்வுகள் கூறுகின்றன.

மரக்கறி எண்ணெயில் முடிவுறு நாடி முடிவுறு நாளத்தில் படியக்கூடிய




**சோலையூர்க் குருபரன்**

கொழுப்பு உள்ளது.

மிருக உணவுகள் மற்றும் கடையில் கொள்வனவு செய்யும் எண்ணெய் ஆகியவற்றில் ட்ரான்ஸ் கொழுப்பு சதுரேட்டட் கொழுப்பு ஆகியன அதிகம் உள்ளது. இக்கொழுப்பு இதயம் நாடி நாளக் குளாய்களில் அதிகம் படியக்கூடியது.

ஒருவரைப் பொறுத்தவரை அவரின் உயரத்துக்கேற்ற அங்கீகரிக்கப்பட்ட நிறை இருத்தல் அவசியமாகும். இதனை உடற்றிணிவுச் சுட்டியின் (Body Mass Index- BMI) உறுதி செய்யப்படுகிறது. சுகதேகியான ஒருவரின் உடற்றிணிவுச் சுட்டி சாதாரணமாக 18.5 க்கும் 24.9 க்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும் என உலக சுகாதாரத் தாபனம் குறிப்பிடுகின்றது. ஒருவருக்கு உடற்றிணிவுச் சுட்டி 18.5 க்குக் குறைவாக இருந்தால் நோயைப் பெற்றுக் கொள்ள ஆயத்தமாகிறார் என்பது அர்த்தமாகும். அதேபோல் 24.9 க்கு மேல் இருந்தால் தொற்றா நோயைக் குணம் குறிகளுக்கு உள்ளாகி இருக்கிறார் என்பது அர்த்தமாகும். அண்மைக் காலங்களில் இலங்கையில் 15 வயதுக்குட்பட்ட 36 வீதமான பிள்ளைகளின் நிறை உடல் பருமன் ஆகியன அதிகரித்திருப்பதாக சுகாதாரொ வைத்திய ஆய்வுப்பிரிவு குறிப்பிடுகின்றது.



**படம் 01**

படம் 01 இல் அப்படி இருந்தவர் இப்படி மாறி இருப்பதை அவதானிக்கலாம்.

எண்ணையில் பொரித்த உணவுகளில் ட்ரான்ஸ் கொழுப்பு உள்ளதனால் ஒமேக்கா பெட்டி அமிலம் அதிகம் சுரப்பதால் குருதி சூடேறி வெப்பம் அதிகரித்துக் கோபம் தூண்டப்படும். இவற்றை மேலும் தொடர்ந்தால் அல்ககோல் கார்சோலை வெளியிடச் செய்து நரம்பு மண்டலத்தைத் தாக்கி கட்டுப்படுத்த முடியாத கோபத்தை ஏற்படுத்தி மன அழுத்தம் பதட்டம் மன உழைச்சல் ஆகியவற்றை ஏற்படுத்தி ஒருவரைத் தொற்றா நோயாளியாக்கி ஆயுளைக் குறைத்து விடுகின்றன..

அதேபோல் திருமண வீடுகளில் வழங்கப்படும் விருந்துபநாரத்தில் பொரித்த கோழி இறைச்சி, மென்பானம், ஐஸ்கிறீம் என்பவற்றால்

பெண் பிள்ளைகளுக்கு அதிக கொழுப்பு உடலில் சேரும்போது ஓ;மோன்கள் சீராக இயங்காமல் பொலிசிஸ்டிக் ஓவரி சின்ட்ரோம் (Poly-sistic Overy Syndrome) நொயால் பாதிக்கப்படுகிறார்கள். இது கரு முட்டை உண்டாகும் சுழற்சியை மாற்றி அமைத்து விரைவில் (Early Puberty) பூப்படையச் செய்வதோடு ஒழுங்கற்ற மாதவிடாய் வட்டத்தையும் ஏற்படுத்தி விடுகின்றன. அத்தோடு பள்ளைப்பேறு தள்ளிப் போதல் பிள்ளைப்பேறு இல்லாமல் போதல் கருப்பை கருப்பைச் சுவர் பலோப்பியன் குழாய் ஆகியன பலவீனமடைதல் கருச்சிதைவு ஏற்படல் கருப்பைப் புற்று நோய் ஏற்படல் சூலகத்தில் செளிப்பான கருமுட்டை உருவாகாதிருத்தல் ஆகியன தோன்றலாம். ஆணுக்கும் இதேமாதிரியான நிலைமை தோன்றலாம்.

உணவில் சேர்க்கப்படும் அஜினோமோட்டோ நமது இரைப்பை, சிறுகுடலில் அகத்துறிஞ்சப்படாத சமிபாடடையாத புரதமாகும். மாதம், வருடங்களாகச் சமிபாடடையாமல், உடல் இளையங்களைப் பாதித்து, எலும்பு, நரம்பு மண்டலத்தையும் பாதித்து குடல் புற்று நோயையும் ஏற்படுத்தக்கூடியது. சிற்றிக் அமிலம், சிக்கின் கியுப், மசாலாத்துள், தக்காளி சோர்ஸ் ஆகியனவும் நமது உடலில் இத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவை. எல்லோரும் இறப்பது உறுதிதான். இருந்தும் இறக்கும் வரை மருந்தும் கையுமாகப் படும் அவஸ்த்தை இருக்கிறதே சொல்லி மாளாது.

ஆகவே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க சுகதேகியாக வாழ்வதற்கு இத்தகைய உணவுகளைத் தவிர்ப்போம். பொல்லைக் கொடுத்து அடி வாங்குவது போல் நமது காசைக் கொடுத்து நமது உயிருக்கு உலை வைக்காதிருப்போமாக.

**சுகதேகியாக நீண்டநாள் வாழ்வதற்கு சுகித்திடுவோம் பாரம்பரிய உணவுதனை**

**நோயற்ற வாழ்வுக்கு முன்னைய திருமண வீடுகளில் வழங்கப்பட்ட பாரம்பரிய உணவு தொடரும்**

---

## இலங்கை புற்றுநோய் சங்க மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில்

# புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி











**(சுமன்)**

இலங்கை புற்றுநோய் சங்கம் மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில் 'புற்றுநோய்க்கு எதிராக அனைவரும் ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நடைபவணி புற்றுநோய்ச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைத் தலைவர் கிழக்குப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் வைத்திய கலாநிதி கே.ஈ.கருணாகரன் தலைமையில் இன்றைய தினம் இடம் பெற்றது.

மட்டக்களப்பு கல்லடிப் பலத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட நடைபவணியானது பிரதான வீதியூடாக மட்டக்களப்பு காந்திப் பூங்கா வரை வந்தடைந்து அங்கு விழிப்புணர்வுக் கருத்துக்கள் இடம்பெற்றன.

நடைபவணியின் போது புற்றுநோயைத் தடுப்பதற்கான வழிமுறைகள், புற்றுநோயில் இருந்து பாதுகாப்பதற்கான ஆலோசனைகள், புற்றுநோய்க்கான அறிகுறிகள் போன்றன தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டதுடன், அது தெடர்பிலான பதாதைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்தின் பிரதான ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்பேரணியில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, கிழக்குப் பல்கலைக்கழக வைத்திய பீடம், மட்டக்களப்பு ரோட்டரிக் கழகம், லயன்ஸ் கழகம், மட்டக்களப்பு நகர் பாடசாலைகளின் மாணவர்கள் எனப் பலரின் ஆதரவும் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

---

# விடுகை விழாவும் லாக்டோ மீடியா நேட்வோர்க் வருடாந்த திறமைக்கான தேடல் விருதுவிழாவும்





**(பாறுக் ஷிஹான்)**

அல்-ஹதீஜா பாலர் பாடசாலை மாணவர்களுக்கான கலை நிகழ்ச்சியும் விடுகை விழாவும் லாக்டோ மீடியா நெட்வொர்க் வருடாந்த திறமைக்கான தேடல் விருதுவிழா -2023 விழாவும் லக்ஸ்டோ மீடியாதலைவர் அன்ஸாரின் தலைமையில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை(5) மாலை இடம்பெற்றது.

நிகழ்வின் முதலில் பிரதம அதிதிகள் மாலை இடப்பட்டு வரவேற்பளிக்கப்பட்ட பின்னர் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஷரீப் பெளண்டஷன் தவிசாளரும் தொழிலதிபருமான கலாநிதி ஷரீப் ஹக்கீம் கலந்து சிறப்பித்தார்.

பின்னர் பாடசாலை மாணவர்களினால் தேசிய கீதம் பாடப்பட்டது. தொடர்ந்து வரவேற்புரை வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன. பிரதம அதிதிகளின் உரை பரிசளிப்பு வைபவம் என தொடர்ச்சியாக இடம்பெற்றன.

பிரதம அதிதி தற்காலத்தில் அதிகரித்து வரும் போதை பொருள் பாவனை தொடர்பிலும் பெற்றோர்கள் மத்தியில் வழங்கி இருந்தார்.

அத்துடன் பாடலுக்கான நடனம் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் திறமை காட்டிய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். ஏனைய அதிதிகளாக ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாறக் அப்துல் மஜீட் கல்முனை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல். எம். ரவூப்மற்றும் பல கல்விமான்கள் புத்திஜீவிகள் கலைஞர்கள் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

மேலும் பல திறமையான கலைஞ்சர்களை கௌரவிக்கும் வகையில் திறமைக்கான தேடல் விருது விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் காலங்களில் எமது பிராந்தியத்தில் உள்ள அனைத்து பாலர் பாடசாலைகளிலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பிரமாண்டமான கௌரவிப்பு நிகழ்வினை ஷரீப் பவுண்டேசன் ஊடக ஏற்பாடு செய்யப்படும் என்பதினை பிரதம அதிதி அவர்களினால் கூறப்பட்டதுடன் திறமையான கலைஞர்களுக்கு சான்றிதழ்களும் நினைவு சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

---



**இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்பிள்டனுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (06) இடம் பெற்ற போது...**

அருந்ததி
இணைய திருமண சேவை

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

# மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25607 | வே | 1974**
கரனைவாய் | இந்து
இலங்கை
அஸ்வினி (மேடம்)
164 செ.மீ

**25499 | வே | 1982**
சுண்டிக்குளி | கிறிஸ்தவம்
Web Analytics | இலங்கை
விசாகம் (விருச்சிகம்
164 செ.மீ

**25546 | வே | 1982**
பருத்தித்துறை | இந்து
Inspector | இலங்கை
உத்திராடம் (மகரம்)
155 செ.மீ | Divorced

**25572 | வே | 1983**
சிறுபிட்டி | இந்து
Teacher | இலங்கை
மூலம் (தனுசு)
152 செ.மீ | செவ் : 7

**25538 | வே | 1984**
காரைநகர் | இந்து | செவ் :4
Development Officer | SL
மிருகசீருடம் (மிதுனம்)
154 செ.மீ | Divorced

**25531 | வ | 1986**
மாவிட்டபுரம் | இந்து
Administrative Officer
அத்தம் (கன்னி) | இலங்கை
149 செ.மீ | செவ் : 2

**25469 | வே | 1988**
வண்ணார்பண்ணை | இந்து
Doctor | UK
பூரம் (சிம்மம்)
173 செ.மீ

**25614 | ப | 1989**
திருகோணமலை | இந்து
இலங்கை
சுவாதி (துலாம்) | செவ் : 1
158 செ.மீ

**25589 | வே | 1989**
நல்லூர் | இந்து
Computer Typing
மகம் (சிம்மம்) | இலங்கை
153 செ.மீ | Divorced

**25613 | வே | 1989**
திருகோணமலை | இந்து
Tailor | இலங்கை
பூரட்டாதி (கும்பம்)
161 செ.மீ

**25585 | ப | 1989**
தெல்லிப்பளை | இந்து
Beautician | இலங்கை
புனர்பூசம் (மிதுனம்)
161 செ.மீ c செவ் : 1

**25611 | ப | 1989**
பருத்தித்துறை | இந்து
Gram Niladhari | இலங்கை
மூலம் (தனுசு)
164 செ.மீ | செவ் : 7

**25610 | கோ | 1991**
சுன்னாகம் | Non RC
Software Engineer
இலங்கை
156 செ.மீ

**25590 | வே | 1991**
திருகோணமலை | இந்து
Engineering Coordinator
பூரட்டாதி (கும்பம்) | சூ.செவ் :12
161 செ.மீ | சைவம்

**25520 | சா | 1992**
கொடிகாமம் | இந்து
கனடா
பூரம் (சிம்மம்)
169 செ.மீ

**25496 | வே | 1992**
வரணி | இந்து
Teacher(Graduate) | இலங்கை
திருவாதிரை (மிதுனும்)
165 செ.மீ | செவ் : 12

**25556 | வி | 1993**
அழியாளை | இந்து
Accountant | இலங்கை
ரோகிணி (இடபம்)
160 செ.மீ

**25591 | கு | 1993**
பருத்தித்துறை | இந்து
Development Officer
அத்தம் (கன்னி) | இலங்கை
170 செ.மீ | செவ் : 7

**25580 | ந | 1993**
சாவகச்சேரி | இந்து
Business | இலங்கை
அத்தம் (கன்னி)
160 செ.மீ | செவ் : 1

**25566 | ந | 1993**
யாழ் நகர் | இந்து
Teacher | இலங்கை
பூசம் (கடகம்)
155 செ.மீ | செவ் :2

**25574 | கோ | 1994**
கொடிகாமம் | இந்து
Development Officer
கார்த்திகை (இடபம்) | செவ் :12
160 செ.மீ | இலங்கை

**25569 | வே | 1994**
யாழ் நகர் | இந்து
Senior Software Engimneer
பூரட்டாதி (கும்பம்) | இலங்கை
172 செ.மீ

**25604 | ப | 1994**
கொடிகாமம் | இந்து
Ass. Lecturer | இலங்கை
சதயம் (கும்பம்)
167 செ.மீ | செவ் : 2

**25521 | வே | 1994**
புங்குடுதீவு | இந்து
Account Assistant
பூசம் (கடகம்) | இலங்கை
150 செ.மீ

**25540 | வி | 1994**
யாழ் நகர் | இந்து
மூலம் (தனுசு)
இலங்கை
155 செ.மீ

**25539 | வே | 1994**
புலோலி | இந்து
Office Admin | இலங்கை
மூலம் (தனுசு)
165 செ.மீ | செவ் : 2

**25467 | ந | 1994**
யாழ்ப்பாணம் | கிறிஸ்தவம்
Medical Company
பூராடம் (தனுசு)
152 செ.மீ | இலங்கை

**25570 | கோ | 1994**
மாதகல் | இந்து
Beautician | இலங்கை
அஸ்வினி (மேடம்)
162 செ.மீ | செவ் : 1

**25525 | வே | 1995**
கொக்குவில் | இந்து
இலங்கை
பூரம் (சிம்மம்)
160 செ.மீ | செவ் : 4

**25565 | கு | 1995**
திருகோணமலை | இந்து
Officer | இலங்கை
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ | செவ் : 1

**25584 | வே | 1995**
திருகோணமலை | இந்து
Accountant | இலங்கை
உத்தரம் (கன்னி)
155 செ.மீ | செவ் : 7

**25515 | வே | 1996**
காரைநகர் | இந்து
Associative Software Eng.
சதயம் (கும்பம்) | இலங்கை
158 செ.மீ | சூ.செவ் : 10

**25464 | வே+கோ | 1996**
நீர்வேலி | இந்து
இலங்கை
திருவோணம் (மகரம்)
173 செ.மீ

**25596 | வே | 1997**
காரைநகர் | இந்து
இலங்கை
மூலம் (தனுசு)
153 செ.மீ | செவ் :12

**25501 | வே | 1997**
வவுனியா | இந்து
Student | இலங்கை
சதயம் (கும்பம்)
173 செ.மீ

**25480 | வே | 1997**
நவாலி | இந்து
Laboratory Technician | UK
திருவோணம் (மகரம்)
152 செ.மீ | செவ் : 1

**25544 | சா | 1999**
மிருசுவில் | இந்து
Nurse | இலங்கை
மிருகசீரிடம் (இடபம்)
155 செ.மீ | சைவம்

**25550 | கோ | 2000**
கொடிகாமம் | இந்து
இலங்கை
பூராடம் (தனுசு)
148 செ.மீ | சூ.செவ் : 3

**25561 | சா | 2001**
மிருசுவில் | இந்து
இலங்கை
உத்திரட்டாதி (மீனம்)
154 செ.மீ

**25552 | வே+ந | 2002**
புங்குடுதீவு | இந்து
இலங்கை
மஜருகசீரிடம் (இடபம்)
155 செ.மீ

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# ஜனாதிபதி மக்கள் ஆட்சிக்கு மறுப்புத் தெரிவிப்பாராக இருந்தால் கோட்டபாயவிற்கு நடந்தது மிக விரைவில் அவருக்கும் நடக்கும்

## தமிழரசு வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன்

(சுமன்)

நிறைவேற்று அதிகாரத்தினால் நாட்டைச் சர்வாதிகாரப் போக்கில் கொண்டு செல்ல நினைத்தவர்களெல்லாம் மக்களால் துரத்தியடிக்கப்பட்டிருக்கின்றார்கள். தற்போதைய ஜனாதிபதி மக்கள் ஆட்சிக்கு மறுப்புத் தெரிவிப்பாராக இருந்தால் கோட்பாயவிற்கு நடந்தது மிக விரைவில் அவருக்கும் நடக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரளைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவருமான கிருஸ்ணபிள்ளை சேயோன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற வேட்பாளர்களுடனான சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் நடக்குமா நடக்காத என்பதற்கப்பால் அறிவிக்கப்பட்ட தேர்தலும் பிற்போடப்பட்டிருக்கின்ற இந்த நிலையில் நாங்கள் தொடர்ச்சியாக எமது உறுப்பினர்கள், எமது மக்களின் அபிப்பிராயங்களை அறிவதற்காகவும், எமது கட்சியின் நிலைப்பாடுகளை அறிவிப்பதற்காகவும் எமது செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஏனெனில் இந்த முறை நடைபெற இருக்கின்ற தேர்தல் இலங்கையின் அரசியல் போக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்ற, அரசியல் ஒழுங்கில் மாற்றத்தை உருவாக்குகின்ற தேர்தலாகவே அமையும்.

மொட்டின் எழுச்சியை விட மேலாக மொட்டின் வீழ்ச்சி அமைந்திருக்கின்ற இந்த சூழலில் அடுத்து எங்களுடைய அரசியல் நிலைமை எவ்வாறு மாறப் போகின்றது என்கின்ற விடயங்களை அவதானித்துக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற தென்னிலங்கை மக்களுக்கு மத்தியில் எங்களுடைய வடக்கு கிழக்கல் குறிப்பாக நாங்கள் ஒரு அரசியல் நிலைப்பாடடை ஆணித்தரமாக எடுக்க வேண்டும். அதனை எமது தமிழரசுக் கட்சியினூடாக நாங்கள் மேற்கொள்ள வேண்டும் என்கின்ற தோற்றப்பட்டோடு மிகக் கூடுதலான மக்கள் எம்மோடு இணைந்து



கொண்டிருக்கின்றார்கள்.

ஏனெனில் இன்றிருக்கின்ற இந்த சூழலில் ஒரு ஜனநாயக விரோத செயற்பாட்டை இந்த ஜனாதிபதி செய்கின்ற போக்குகள் இருப்பதன் காரணமாக தற்போது அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைளுக்கான செனற்சபை குழுவானது ஆணித்தரமாகக் கூறியிருக்கின்றது இந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று. காரணம் என்னவென்றால் இந்த நாட்டில் மாகாணசபைகளினுடைய தேர்தல் பிற்போடப்பட்டு பல வருடங்களாக இருக்கின்றது. ஜனநாயக ரீதியான மக்களாட்சி அங்கே குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கின்றது. இதே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கும் போது பிற்போடப்பட்ட தேர்தல் தற்போது அவர் ஜனாதிபதியாக இருக்கும் போது கூட எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

அதே வகையில் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுயாதீன ஆணைக்குழுவாக இருக்கின்ற தேர்ல்கள் ஆணைக்குழு நடத்த முற்பட்டாலும் அரசாங்கம் இதற்குத் தடைபோட்டுக் கொண்டிருக்கின்றது. இத்தேர்தலில் அரசாங்கத்திற்கு இருக்கின்ற மக்கள் ஆணை வெளியுலகத்திற்கு வந்து விடும், இதன் மூலமாக அவர்களின் அரசியல் அடிமட்டத்திற்கு வந்து விடும் என்பதற்காக இவ்வாறான ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கின்ற நிலைமைகளை அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது.

இந்த நாட்டிலே தற்போது மாகாண சபைகளின் மக்கள் ஆட்சி இல்லை, அதேபோன்று உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் ஆட்சி இல்லாதொழிக்கும் நிலை ஏற்படுகின்றது. நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி வைத்துக் கொண்டு இந்த நாட்டைச் சர்வாதிகாரப் போக்குக்குள் கொண்டு செல்லலாம் என ஜனாதிபதி அவர்கள் நினைக்கின்றார். இவ்வாறு நினைத்தவர்களெலல்லாம் மக்களால் துரத்தியடிக்கப்பட்டிருக்கின்றார்கள். தற்போதைய ஜனாதிபதி மக்கள் ஆட்சிக்கு மறுப்புத் தெரிவிப்பாராக இருந்தால் கோட்பாய ராஜபக்சவிற்கு நடந்தது மிக விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் நடக்கும் என்று தெரிவித்தார்.

# கோல்லநுலையில் இல்ல விளையாட்டுப் போட்டி









மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் விழா 04) சனிக்கிழமை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது, குறுந்தூர ஓட்டம், அஞ்சல், செயற்பட்டு மகிழ்வோம் போன்ற போட்டிகளும், மைதான பவனி, அணிநடை மரியாதை, கராத்தே போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கம்பர், வள்ளுவர் இல்லங்களாக பிரிக்கப்பட்டு நடைபெற்ற குறித்த போட்டியில் வள்ளுவர் இல்லம் முதலிடத்தினைப் பெற்றுக்கொண்டமையுடன், இல்லச்சோடனை, அணிநடை மரியாதை போன்றவற்றில் கம்பர் இல்லம் முதலிடத்தினைப் பெற்றுக்கொண்டது. இதன் போது வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும், வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

வித்தியாலய அதிபர் வ.துசாந்தன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்ச்சியில் மாகாணக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், பிரதிக்கல்விப் பணிப்பாளர் ந.குகதாசன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் மூ.உதயகுமாரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஒரு கோடி ரூபாய் பெறுமதியான உபகரணம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு அன்பளிப்பு



( வி.ரி .சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு ஒரு கோடி 25 லட்ச ரூபா பெறுமதியான உபகரணம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஆர்..முரளீஸ்வரனின் வேண்டுகோளுக்கிணங்க, டாக்டர். திருமதி புஷ்பலதா லோகநாதனின் விடா முயற்சியின் பலனாக இந்த உதவி கிடைக்கப்பெற்றது.




ஜூட் மசாடோ (Jude Machado) அவர்களின் மூலமாக ''De Soutter Medical Ltd, Halton Brook Business Park, England '' மருத்துவ உபகரண உற்பத்தி செய்யும் நிறுவனத்திடமிருந்து 12.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கிடைத்தது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் Dr.R. முரளீஸ்வரனிடம் நன்கொடையாக இவை வழங்கிவைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் டாக்டர் புஷ்பலதா லோகநாதன், கலாநிதி.நாகலிங்கம் பிரசாந்தன், எலும்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் எஸ்.வருண்பிரசாந், நிருவாக உத்தியோகத்தர் ரி.தேவஅருள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளிகளும் கலந்துகொண்டனர்.

# திராய்மடு பகுதியில் புதிதாக எரிபோருள் நிரப்பு நிலையம்





(சுமன்)

மட்டக்களப்பு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்ககத்தினால் திராய்மடு பகுதியில் புதிதாக எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பது தொடர்பில் காணியொன்றினைப் பெறும் முகமான கள விஜயமொன்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபையின் திட்ட முன்மொழிவுக்கமைவாக, பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் திரய்மடு பகுதியில் புதிதாக எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை அமைப்பதற்காக மேற்படி பகுதியில் காணியொன்றைக் கோரி மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தில் விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோளுக்கு அமைவாக குறிப்பட்ட பிரதேசத்தில் களவிஜயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மேற்படி களவிஜயத்தில் மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வ.வாசுதேவன், மட்டக்களப்பு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.துதீஸ்வரன், இயக்குனர் சபை உறுப்பினர்கள், பொதுமுகாமையாளர், பொதுச்சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க காணியின் அமைவிடம் தொடர்பில் இங்கு பார்வையிடப்பட்டதுடன், பொதுமக்கள், தொழில்புரிவோர், எனப் பலரும் இதன் மூலம் பயன்பெறும் வகையிலான இடமொன்றைப் பெறுவது தொடர்பில் இதன்போது பரிசீலிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் இளம் கண்டுபிடிப்பாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான நிகழ்வு!

(நூறுல் ஹுதா உமர்)

இந்த ஆண்டுக்கான இளம் கண்டுபிடிப்பாளர்களை (Junior inventor of the year (JIY) 2022) தேர்ந்தெடுப்பதற்கான நிகழ்வு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) கூட்ட மண்டபத்தில் Institution of Engineers, Sri Lanka (IESL) Eastern Chapter அமைப்பின் தவிசாளர் தென்கிழக்கு பல்கலைகழக பொறியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் பொறியியலாளர் கலாநிதி எஸ்.எம். ஜுனைடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அம்பாறை மாவட்ட உதவி பொது முகாமையாளர் பொறியியலாளர் கே.வினோதன் கலந்து கொண்டு புதிய இளம் கண்டுபிடிப்பாளர்கள் முன்னிலையில் உரையாற்றினார்.

நிகழ்வில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 32 மாணவர்கள் தங்களது புத்தாக்கங்களை காண்பித்து அவைகளின் செயற்பாடுகள் தொடர்பிலும் குறித்த ஆக்கங்களை எவ்வாறு உருவாக்கினார்கள்; என்ற தகவல்களையும், அதற்கு பின்புலமாக அமைந்த காரணிகள் தொடர்பிலும் விளக்கமளித்தனர்.

இளம் கண்டுபிடிப்பாளர்களின் திறமைகளை பாராட்டிய அமைப்பின் மத்தியஸ்த குழுவினர் குறித்த புத்தாக்கங்களை மேலும் மெருகூட்டகூடிய ஆலோசனைகளையும் வழங்கினர். கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் Institution of Engineers, Sri Lanka (IESL) அமைப்பினால் 12 தொடக்கம் 19 வரையான வயதுடைய இளைஞர்களின் ஆற்றல் மற்றும் புத்தாக்கதிறனை மேம்படுத்தும் முகமாக இடம்பெற்றுவரும் இவ்வாறான நிகழ்வுகள் புதிய கண்டுபிடிப்பாளர்களை இனம்காட்டி வருகின்றன.

நிகழ்வின்போது பொறியியலாளர்களான எம்.ஐ.நஸீர், எம்.எம்.எம்.ஏ. பாயிக், ஏ.எம்.ஹய்க்கல், ஏ.பிரிந்தான், கலாநிதி எம்.என்.அஜ்மல் ஹினாஸ், ஏ.ஜி.சாமில் சப்றி, ஐ.எல். எம்.சப்ரி, எம்.எப்.எம் இஸ்க்கி, இசட்.ஏ.எம். அஸ்மிர், எம்.எஸ்.எம்.நவாஸ், எம்.கஜினி உள்ளிட்ட அமைப்பின் பொறியியலாளர்கள் பலர் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.



இன்றைய தினத்தில் பங்குகொண்ட மாணவர்களின் ஆக்கங்களில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் தேசிய மட்ட போட்டிகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தகவலறியும் உரிமைச்சட்டம் தோடர்பான செயலமர்வு

பொகவந்தலாவ நிருபர் எஸ்.சதீஸ்

தகவலறியும் உரிமைச்சட்டம் தொடர்பான செயலமர்வு ஒன்று 06.03.2023. திங்கள்கிழமை ஹட்டன் லாஎடம்ஸ் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது இந்த செயலமர்வானது தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஆணையாளர்லான கிஷாலி பிண்டோ ஜயவர்தன, ஜகத் லியனாராச்சி, மொகமட் நாஹியா ஆகியோரின் பங்குபற்றலுடன் இந்த செயலமர்வு இடம்பெற்றது.

இதன் போது நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்கள், சீவில் சமுகத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த செயலர்மவில் தகவலறியும் உரிமைச்சட்டம் தொடர்பாக எவ்வாறு வின்னப்பிப்பது எவ்வாறு தகவல்களை பெற்றுக்கொள்வது 14நாட்களுக்கும் கோறும் வின்னப்ப படிவத்திற்கு தகவல்கள் வழங்கபடாவிட்டால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் போன்ற விடயங்கள் தெழிவுபடுத்தப்பட்டமை குறிப்பிடதக்கது.